இணக்கமான வாழ்வுக்கு முன்னுரிமை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் - முதல் பக்கத் தொடர்ச்சி...

மரபுகள், நடைமுறைகள் மற்றும் தனிப் பட்ட சட்டங்களை மதித்து பாதுகாப்பது முக்கியம் எனவும் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மதக் குழுவுக்கும், அதன் சொந்த விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமையை வழங்கும் பிரிவு 25ன்கீழ் அரசியலமைப்பால் வழங்கப்பட்ட சுதந்திரத்தை பொது சிவில் சட்டம் மீறுவதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், பிரிவு 29, பல்வேறு மதக் குழுக்கள் தங்கள் தனித்துவமான கலாச்சாரத்தைப் பாதுகாக்கும் உரிமையை வழங்குவதாகவும், பொது சிவில் சட்டம் போன்ற ஒரு சட்டத்தைத் திணிக்கும் எந்தவொரு முயற்சியும், மத விவகாரங்களில் அரசின் அத்துமீறலாக கருதப்படும் என்றும், இது எதிர்காலத்தில் தனிமனித சுதந்திரங்கள் மீதான ஆக்கிரமிப்புகளுக்கு கவலைக்குரிய ஒரு முன்னுதாரணத்தை உருவாக்கிடும் என்றும் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

கூட்டாட்சி அமைப்பு !

இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பு மாநிலங்களுக்கு தன்னாட்சியை வழங்குகிறது மற்றும் அவற்றின் தனித்துவமான சமூக கலாச்சார அடையாளங்களை மதிக்கிறது என்று தெரிவித்துள்ள அவர், தனிநபர் சட்டங்களை மையப்படுத்துவதன் மூலமும், மாநிலங்கள் தங்கள் சொந்த விவகாரங்களை நிர்வகிப்பதற்கான உரிமைகளை அழிப்பதன் மூலமும், பொது சிவில் சட்டம் இந்தக் கோட்பாட்டை மீறுவதாகத் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், மாநிலங்களின் செயலூக்கமான பங்கேற்பு மற்றும் ஒப்புதல் இல்லாமல் தனிநபர் சட்டங்களில் எந்தவொரு சீர்திருத்தமும் நாட்டின் கூட்டாட்சி கட்டமைப்பை பலவீனப்படுத்தும் என்றும், தனிநபர் சட்டங்களில் உள்ள சீரான தன்மை ஒன்றுபட்ட தேசத்தை உருவாக்காது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சமூக ஒருங்கிணைப்பு!

பொது சிவில் சட்டம், பல்வேறு மத சமூகங்களிடையே ஆழமான பிளவுகளையும் சமூக அமைதியின்மையையும் உருவாக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்றும், பலவகையான மத, பண்பாட்டு, மொழி வேறுபாடுகள் உள்ள நமது நாட்டில், மத நல்லிணக்கம் என்பது மிகவும் முக்கியமானது என்றும், முரண்பாடுகளை உருவாக்கி பகைமையை வளர்க்கக்கூடிய ஒரே வகையான சிவில் சட்டத்தை திணிப்பதை விட, மக்களிடையே பரஸ்பர புரிதலையும், மரியாதையையும் மேம்படுத்துவது முக்கியம் என முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

வரலாற்றுப் பின்னணி!

இந்தியாவில் தனி நபர் சட்டங்கள் பல நூற்றாண்டுகளாக பரிணமித்துள்ளன என்றும், பல்வேறு சமூகங்களின் வரலாற்று, கலாச்சார மற்றும் மத சூழல்களில் ஆழமாக வேரூன்றியுள்ளன என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், பொது சிவில் சட்டத்திற்கான முன்மொழிவு இந்த வரலாற்று அம்சத்தை அங்கீகரிக்கத் தவறுவதுடன், பல்வேறு மதக் குழுக்களின் மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகளுடன் ஒத்துப்போகாத ஒரு சட்டத்தைத் திணிக்க முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபான்மையினர் உரிமைகள்!

அரசியலமைப்பின் 29வது பிரிவின் மூலம், சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்துப் பாதுகாக்கும் மதச்சார்பற்ற நாடு என்பதில் இந்தியா பெருமை கொள்வதாகவும், அரசியலமைப்பின் ஆறாவது அட்டவணை, மாநிலங்களின் பழங்குடிப் பகுதிகள், மாவட்ட மற்றும் வட்டாரக் கவுன்சில்கள் மூலம் தங்கள் பழக்கவழக்கங்களையும் நடைமுறைகளையும் பாதுகாப்பதை உறுதி செய்வதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், பொது சிவில் சட்டம் இயல்பிலேயே, அத்தகைய பழங்குடி சமூகங்களை அதிக அளவில் பாதிக்கும் மற்றும் அவர்களின் பாரம்பரிய நடைமுறைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் அடையாளங்களைப் பின்பற்றுவதற்கும், பாதுகாப்பதற்கும், அவர்களின் உரிமையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் ஆற்றலை உள்ளடக்கியதாக பொது சிவில் சட்டம் அமைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

சமூகப் பொருளாதார தாக்கங்கள்!

நமது சமூகத்தில் நிலவும் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை கருத்தில் கொள்ளாமல், ஒரே மாதிரியான சட்டத்தை அமல்படுத்துவது, பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும், வெவ்வேறு சமூகங்கள் வளர்ச்சி, கல்வி மற்றும் விழிப்புணர்வின் வெவ்வேறு நிலைகளைக் கொண்டுள்ளன என்றும், அனைவருக்கும் பொருந்தக்கூடிய ஒரேமாதிரியான அணுகுமுறை தற்போதுள்ள ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கக்கூடும் என்றும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நமது மகத்தான தேசத்தின் கட்டமைப்பை உருவாக்கும் பல்வேறு சமூகங்களிடையே இணக்கமான வாழ்வை வளர்ப்பதே நமது முதன்மை குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், ஒரே மாதிரியான சட்டத்தைத் திணிப்பதற்குப் பதிலாக, மதங்களுக்கிடையிலான உரையாடல் களை வலுப்படுத்துவதிலும், சகிப்புத்தன்மையை ஊக்குவிப்பதிலும், இந்தியாவை வரையறுக்கும் வேற்றுமையில் ஒற்றுமை உணர்வை வளர்ப்பதிலும் கவனம் செலுத்துவோம் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

தற்போதைய நிலையில், மாநில அரசுகள், மதத் தலைவர்கள் மற்றும் சமூகப் பிரதிநிதிகளுடன் இச்சட்டம் தொடர்பான விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட வில்லை எனத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இது அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை எட்டுவதற்கு முக்கியமானது என இந்திய சட்ட ஆணையத் தலைவரிடம் கோரியுள்ளார்.

மேற்காணும் கருத்துகளைத் தீவிரமாகப் பரிசீலித்து, பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தும் திட்டத்தை கைவிட வேண்டும் என்று இந்திய சட்ட ஆணையத் தலைவர் நீதியரசர் ரிதுராஜ் அவஸ்தி அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சட்டங்களில், ஒரேமாதிரியான தன்மையை கொண்டுவர முயற்சிப்பதைவிட, அனைத்து மக்களுக்கும் உரிமைகள் மற்றும் வாய்ப்புகளில் ஒரேமாதிரியான சூழ்நிலையை ஏற்படுத்துவதை நமது நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளதோடு, பன்முகத்தன்மை கொண்ட நாட்டில் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் ஒரே மாதிரியான பொது சிவில் சட்டம் தன்மை வழிவகுக்காது என்ற அடிப்படைக் கோட்பாட்டை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், நமது நாட்டின் பலம், அதன் பன்முகத்தன்மையில் உள்ளதாகவும், பொது சிவில் சட்டத்தின் மூலம் அதை ஒருமுகப்படுத்த முயற்சிப்பதை விட, நாம் நமது பன்முகத்தன்மையை நிலைநிறுத்திக் கொண்டாட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை -

குடும்பத் தலைவிகளின் அன்றாட வாழ்க்கைக்குப் பேருதவியாக இருக்கும்!

‘தினத்தந்தி’ தலையங்கத்தில் கருத்து!

சென்னை, ஜூலை 14-

தேர்தல் அறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தபடி, கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக ஆயிரம் ரூபாய் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் வழங்கப்படுவது குடும்பத்தலைவிகளின் அன்றாட வாழ்க்கைக்குப் பேருதவியாக இருக்கும் என ‘தினத்தந்தி’ நாளேடு 13.7.2023 அன்று தலையங்கத்தில் கருத்து தெரிவித்துள்ளது.

தினத்தந்தி
13.7.2023 திங்கள்கிழமை
கலைஞர் மகளிர் உரிமை தொகை!

அத்தலையங்கம் வருமாறு:-

திராவிட இயக்க தலைவர்கள் அனைவருமே பெண்கள் உரிமைக்காகவும், பெண்களின் முன்னேற்றத்துக்காகவும் குரல் கொடுத்து இருக்கிறார்கள். திராவிட இயக்க தலைவர்கள் அனைவருமே பெண்கள் உரிமைக்காகவும், பெண்களின் முன்னேற்றத்துக்காகவும் குரல் கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் பாதையில் அடியொற்றி நடக்கும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், தி.மு.க. தேர்தல் அறிக்கையிலேயே, மகளிர் நலனுக்காக பல அறிவிப்புகளை வெளியிட்டார். அதில் ஒன்று, மகளிருக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டது தான். இதை அவர் இலவசம் என்று சொல்லவில்லை. இது மகளிரின் உரிமை என்ற வகையில், உரிமை தொகை என்று சொல்லி, மகளிருக்கு பெருமை சேர்த்தார். கடந்த 2 ஆண்டுகளாக பெண்கள், ஆயிரம் ரூபாய் உதவி தொகை எப்போது தங்களுக்கு கிடைக்கும்? என்று எதிர்பார்த்துக்கொண்டு இருந்தனர்.

எதிர்க்கட்சிகளும் தேர்தல் அறிக்கையில், பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று சொன்ன வாக்குறுதி என்ன ஆச்சு? என்று மேடைதோறும் முழங்கினர். அறிக்கைகள் வெளியிட்டனர். சொன்ன சொல்லை காப்பாற்றும் விதமாக கடந்த மார்ச் மாதம் சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில், “குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்தோம்

‘சொன்னதை செய்வோம், செய்வதை சொல்வோம்’ என்ற இலக்கின்படி, தகுதிவாய்ந்த குடும்பங்களின் குடும்ப தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் ரூ.1,000 உரிமை தொகையாக வழங்கப்பட இருக்கிறது. சமையல் கியாஸ், விலைவாசி உயர்வால் அதிகரிக்கும் குடும்ப செலவுகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் குடும்ப தலைவிகளுக்கு, மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் என்பது அவர்களது அன்றாட வாழ்க்கைக்கு பேருதவியாக இருக்கும்.

இந்த திட்டம் கலைஞரின் நூற்றாண்டான இந்த ஆண்டில் திராவிட இயக்க மாதம் என்று சொல்லத்தக்க, செப்டம்பர் மாதத்தில் அறிஞர் அண்ணா பிறந்த நாளான 15ந் தேதி முதல்அமைச்சரால் தொடங்கி வைக்கப்பட இருக்கிறது” என்று அறிவிக்கப்பட்டது. இந்த திட்டத்தை செயல்படுத்த மகளிர் உரிமை தொகை திட்ட சிறப்பு அதிகாரியாக ஐ.ஏ.எஸ். அதிகாரி இளம்பகவத் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த திட்ட செயலாக்கத்தின் பூர்வாங்க பணிகள் இப்போதே தொடங்கிவிட்டது. இதற்காக கடந்த வாரம் வெள்ளிக்கிழமை மாவட்ட கலெக்டர்களுடன் காணொலி காட்சி மூலம் உரையாற்றிய முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்த மகத்தான திட்டத்துக்கு கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் என்று பெயர் சூட்டப்படுகிறது. இதற்காக ரூ.7 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் பயனைப்பெற ஒன்றரை கோடி விண்ணப்பங்கள் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான விண்ணப்ப ங்களைப்பெற ரேசன் கடைகள் தோறும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட வேண்டும். எந்தவொரு தகுதியான பயனாளியும் விடுபட்டு விடக்கூடாது என்று பேசினார்.

இதைத்தொடர்ந்து, இந்த ஆயிரம் ரூபாய் உரிமை தொகையை பெற தகுதியான மகளிர் யார்யார்? என்பதை விளக்கும் 14 வழிகாட்டு நெறிமுறைகள் அரசால் வெளியிடப்பட்டுள்ளன. வசதி படைத்தவர்களுக்கு இந்த உரிமை தொகை தேவையில்லை, வசதியில்லாத அனைவருக்கும் இந்த உதவி தொகை தேவை என்ற அளவில், இந்த வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. தகுதியான எந்த பயனாளியும் விடுபட்டு விடக்கூடாது என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மாவட்ட கலெக்டர்களுக்கு கூறிய அறிவுரை, ஏழை பெண்களுக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. ஏழை குடும்பங்களை சேர்ந்த பெண்களின் வாழ்வில் இந்த ஆயிரம் ரூபாய் என்பது பேருதவியாக இருக்கும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பகல் 12 மணி முதல் இரவு 10 மணி வரைதான் திறந்திருக்கும்!

டாஸ்மாக் கடைகள் செயல்படும் நேரத்தில் மாற்றம் இல்லை!

அமைச்சர் முத்துசாமி திட்டவட்டம்!

சென்னை, ஜூலை.14

தற்போது உள்ளதுபோல பகல் 12 மணி முதல் இரவு 10 மணிவரைதான் டாஸ்மாக் கடைகள் செயல்படும் என்றும், அந்த நேரத்தை மாற்றும் எண்ணம் இல்லை என்றும் அமைச்சர் முத்துசாமி கூறியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர்களுக்கு அமைச்சர் முத்துசாமி நேற்று பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

டாஸ்மாக் கடைகளை வழக்கத்தைவிட முன் கூட்டியே திறப்பதற்கு கோரிக்கைகள் வந்துள்ளதாக கூறியிருந்தேன். இது சம்பந்தமாக நான் கூறிய கருத்தின் முழு பகுதியையும் கவனிக்காமல், அதிலுள்ள ஒரு சில பகுதியை மட்டும் கேட்டு சில அரசியல் கட்சிகள் கருத்து தெரிவித்துள்ளன.

நான் திட்டவட்டமாக சொல்வது என்னவென்றால், டாஸ்மாக் கடைகளுக்கான நேரத்தை மாற்றுவதற்கான எண்ணம் அரசுக்கு இல்லை. இப்போதுள்ளபடி பகல் 12 மணியில் இருந்து இரவு 10 மணிவரைதான் இயங்கும். அதில் மாற்றம் எதுவும் இல்லை.

டாஸ்மாக் மது விற்பனையில் உள்ள சில சிக்கல்களை ஒதுக்கித் தள்ள முடியவில்லை. மற்ற நேரத்தில் தவறான இடத்தில் மது வாங்குவதை தவிர்த்துவிட்டு, டாஸ்மாக் கடை திறந்திருக்கும் நேரத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கடை நேரத்தை மாற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்தவர்களுக்கு ஆலோசனை வழங்கி உள்ளோம்.

மது பாட்டில்களை வெளியே போட்டுச் செல்வது உள்பட பல பிரச்சினைகள் உள்ளன. அவை தொடர்பாக தொழிற்சங்கங்கள் உள்பட பல தரப்பினரும் பேசுகிறோம். அரசின் கொள்கைக்கு முரணானவற்றை ஒதுக்கிவிட்டு மற்ற கருத்துகள் பற்றி ஆய்வு செய்கிறோம். மற்ற மாநிலங்களுடனும் ஒப்பிட்டு பார்த்து வருகிறோம். ‘டெட்ரா பேக்’ குடுவைகளுக்கும் சிலர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

90 மி.லி. ‘மினி குவார்ட்டர்’ மது விற்பனை செய்தால், குறைவான பணம் வைத்திருப்பவரும் அதை வாங்கி அருந்த வாய்ப்பு ஏற்படுமே என்று கேட்டால், இதுசம்பந்தமாக அனைத்து தரப்பினரின் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு பெரும்பான்மை கருத்தின் அடிப்படையில் முடிவு எடுக்க இருக்கிறோம். 90 மி.லி. அளவில் மதுவை விற்பனை செய்ய வேண்டும் என்பது அரசின் விருப்பம் அல்ல.

ஆனால் அளவுக்கு அதிகமாக (90 மி.லி.க்கு மேல்) சிலர் மது அருந்தும் தவறுகளும் நடக்கிறது. அந்த கோணத்தில் சிந்தித்தோம். ஆனால் அது வேறு விளைவுகளை ஏற்படுத்துவதான சூழ்நிலை வந்தால் அதை கைவிட்டுவிடுவோம்.

கல்வி நிறுவனங்கள், கோவில் அருகில் உள்ள மதுக் கடைகள் பற்றி மீண்டும் ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்று முதல்அமைச்சர் அறிவுறுத்தி உள்ளார். அதுபோன்ற கடைகளை கண்டறிந்து மூடி விடுவோம். மூடப்பட்டுள்ள கடைகளின் முன்னாள் வாடிக்கையாளர்கள் போதைக்காக தவறான இடங்களுக்கு சென்றுவிடக்கூடாது என்பதுதான் அரசின் எண்ணம். அதற்கு வாய்ப்பு அளித்துவிடக்கூடாது. 24 மணி நேரமும் மது தொடர்பாகவே அதிகாரிகள், போலீசார் கவனித்துக் கொண்டிருக்க முடியாது.

கள்ளச்சாராயத்தை நோக்கி யாரும் சென்றுவிடுவார்களோ என்ற அச்சம் அரசுக்கு இல்லை. மது என்பது மக்களிடையே மிகவும் உணர்வுப்பூர்வமான விஷயமாக இருப்பதால் இப்படியோ அல்லது அப்படியோ போக முடியவில்லை. எனவே இதில் அனைவரையும் வைத்து பேசி முடிவு எடுக்க உள்ளோம்.

பாட்டிலுக்கு கூடுதலாக ரூ.10 வாங்கும் பிரச்சினை இன்னும் தொடர்கிறதா? என்று கேட்டால், சில இடங்களில் அப்படி நடந்தது பெரிதாக்கப்பட்டு விட்டது. இப்போது கூட இரண்டொரு இடங்களில் நடக்கிறது. 100 சதவீதம் இல்லை என்று சொல்ல மாட்டேன்.

அங்கும் நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகளை செய்திருக்கிறோம். இந்த பிரச்சினை கட்டுப்படுத்தப்படும். சமீபத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் சம்பந்தப்பட்டவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு உள்ளார்.

டாஸ்மாக் தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருகிறார்கள். அவற்றை தீர்க்க தொழிற்சங்கங்களுடன் பேசி இருக்கிறோம். இதில் என்னென்ன நிவாரணம் செய்யப்படலாம் என்பது பற்றிய அறிவுரைகளை அதிகாரிகள் அளித்துள்ளனர். இன்னும் 10 நாட்களில் தொழிற்சங்கங்களை அழைத்துப் பேசி அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

விழிப்புணர்வு

மதுவால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே டாஸ்மாக் கடையிலேயே ஏற்படுத்த இருக்கிறோம். கடையின் கண்காணிப்பாளருக்கும், விற்பனையாளருக்கும் இதுசம்பந்தமான சுற்றறிக்கை அளிக்கப்பட்டு உள்ளது.

பில் தரப்படும்

டாஸ்மாக் கடைகளில் கண்காணிப்பு கேமரா பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அந்த கேமரா மூலம் சென்னையில் இருந்தபடியே அதிகாரிகள், கடையை கண்காணிக்கலாம். உள்ளூர் போலீசும் கண்காணிப்பார்கள். கடையின் அளவு மிகச் சிறியதாக உள்ளது. இனி கடைகளை 500 சதுரஅடிக்கு மேலான இடங்களில் வைக்க முடிவு செய்துள்ளோம்.

அப்படி இடம் அமையும் போது பில் போட தனி இடம் இருக்கும். தற்போது 500 சதுர அடிக்கு மேலான இடங்களில் உள்ள கடைகளை கண்டறிந்து அங்கு பில் எந்திரம் வைக்க முடிவு செய்துள்ளோம். மற்ற கடைகளை மாற்றி வேறு இடத்திற்கு கொண்டு செல்வோம். பில் வழங்கும் முறையை கொண்டு வருவோம். கேரளாவில் இந்த நிலை உள்ளது. ஆனால் அங்கு கடை ஆயிரம் சதுரஅடிக்கு மேல் உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

திருக்கோயில்களில் பக்தர்களுக்கான வசதிகளை

மேம்படுத்துதல் குறித்த ஆய்வுக் கூட்டம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூலை 14-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் 13.07.2023 ஆணையர் அலுவலகத்தில் திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்திடும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மதுரை மாவட்டம், அழகர்கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில், கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், திருவள்ளூர் மாவட்டம், சிறுவாபுரி, அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்சி மாவட்டம், குமாரவயலூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்திடும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் முடிகாணிக்கை மண்டபம், அன்னதானக் கூடம், பக்தர்கள் தங்கும் விடுதிகள், திருமண மண்டபம், பக்தர்கள் காத்திருப்பு அறை, வாகன நிறுத்துமிடம், கூடுதல் கழிவறை மற்றும் குளியலறைகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு ஆகிய பணிகள் குறித்தும்,

சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் கட்டப்பட்டு வரும் கலாச்சார மையம் மற்றும் மயிலாப்பூர், திருவள்ளுவர் திருக்கோயில், நாகப்பட்டினம் மாவட்டம், துளசியாப்பட்டினம், அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில் வளாகத்தில் கட்டப்பட்டு வரும் ஔவையார் மணிமண்டபம் ஆகியவற்றின் பணி முன்னேற்றம் குறித்தும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் விரிவான ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கும், பொறியாளர்களுக்கும் அறிவுரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, தலைமைப் பொறியாளர் சி.இசையரசன், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் 2023–ஆம் ஆண்டு வனபாதுகாப்பு சட்டம் தொடர்பான நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டு குழு கூட்டத்தில் தி.மு.க சார்பில் இரா.கிரிராஜன் எம்.பி. கலந்து கொண்டார்.

தந்தை பெரியார் திராவிடர் கழகம்- திருவரங்கம் பெரியார் பாசறை நடத்தும்

“முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா” - 5 நாட்கள் தொடர் நிகழ்ச்சிகள்!

மாவட்டச் செயலாளர் க.வைரமணி - மேயர் அன்பழகன் துவக்கி வைப்பு! சீனி விடுதலை அரசு சிறப்புரை!

திருவரங்கம், ஜூலை 14-

தந்தை பெரியார் திராவிடர் கழகம் மற்றும் திருவரங்கம் பெரியார் பாசறை நடத்தும் “முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா தொடர் நிகழ்ச்சிகள் 12.7.2023 முதல் 16.7.2023 முடிய 5 நாட்கள் நடைபெறுகிறது. இதில் முதல் நாள் நிகழ்ச்சியில் திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் க.வைரமணி, மேயர் மு.அன்பழகன் ஆகியோர் துவக்கி வைத்தனர். பகுதிக் கழக செயலாளர் என்.ராம்குமார் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் முதல் நாளில் தந்தை பெரியார் திராவிடர் கழக கொள்கை பரப்புச் செயலாளர் சீனி விடுதலை அரசு “அண்ணா வழியில் அயராது உழைப்போம்” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து நடைபெறும் இந்நிகழ்ச்சிகளில் வெல்லமண்டி சோமு, இந்திரஜித், வி.ஜவஹர், அ.க.தமிழரசன், ராயல் ராஜா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மேலும் இதில் ச.பிரபாகரன், ப.சாய்பிரகாஷ், கோ.ரவிச்சந்திரன், காமராஜ், ம.ராஜாங்கம், மு.அறிவழகன், எம்.மணிவாசகம், இளங்கோவன், சீனிவாசன், கு.வீரன், ஏ.பிரபாகரன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் கட்டவாக்கம் ஊராட்சியில் மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பல்வேறு நல திட்டங்களை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.கே. தேவேந்திரன், ஒன்றிய குழு துணை தலைவர் பி.சேகர், பேரூர் செயலாளர் என்.பாண்டியன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் திருமதி பொற்கொடி செல்வராஜ், ஒன்றிய குழு உறுப்பினர் டி.சஞ்சய் காந்தி, ஊராட்சி மன்ற தலைவர் திருமதி அஞ்சலம் அருள் மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.